---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) | நியமத்தின் 21(ஏ) பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களின் தொகுதியினுள் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய பதிவுகள் மற்றும் ஏனைய விரிவான பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், நியமத்தின் 132(அ) பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிறுவனத்திற்குரிய அடிப்படை கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டதாக மற்றும் அளவிட்டு அடிப்படைகளாக முன்னைய கிரய பெறுமதி மற்றும் தற்போதைய பெறுமதி ஆகிய 2 பெறுமானங்களை அடிப்படையாக கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டது என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நியமத்தின் 150(அ) முதல் (ஈ) வரையான பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் நிறுவனத்தின் நிலையான அமைவிடம், சட்டரீதியான தன்மை மற்றும் அதன் பிரதான பணிகளின் விபரங்கள், செயற்பாட்டுகளின் தன்மை மற்றும் அதன் பிரதான பணிகளின் தன்மையும், செயற்பாட்டு பணிகளை கட்டுப்படுத்துவதற்குரிய நியதிச்சட்டம் தொடர்பான தொடர்பு, கட்டுப்பாட்டு நிறுவனத்தின் பெயர் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும், அந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2006 இன் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவன (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை, 2A ஆம் இலக்க , CBM House, 4ஆம் தளம், குள வீதி, கொழும்பு 08 எனும் விலாசத்தில் அமைந்துள்ளது என்பது மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அவற்கை கண்காணிப்பதற்காக அதிகாரச்சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் பேரவையின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 22,285,000 தொகை வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்த வருமானத்தின் வகைப்படுத்தலுக்காக பதிவுக் கட்டணத்தின் அடிப்படையில் மருத்துவமனையின் வகைப்படுத்தலினை இனங்காணுவதற்கு, வங்கி வைப்பு அதிகாரச்சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள துடன், அதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக இலத்திரனியல் அடிப்படையில் பதிவு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் எதிர்காலத்தில் தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவினை அந்த நடைமுறையின் கீழ் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வங்கிக்கு நேரடியாக கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்காக நடைமுறையொன்று இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிராமை யால், மீளாய்வாண்டினுள் 329 சந்தர்ப்பங்களில் நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 3,517,100 கூட்டுத்தொகையை இனங்கண்டு கணக்கு வைப்பதற்க நடவடிக்கை எடுக்காது தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | அப்போது காணப்பட்ட வங்கிக்கு கிடைக்கும் பணத்தை இனங்காணும் நடைமுறையில் நிலவிய குறைபாடுகள் காரணமாக இந்த தவறு இடம்பெற்றுள்ளது என்பது மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இலத்திரனியல் நடைமுறைகளின் ஊடாக இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வங்கிக்கு நேரடியாக கிடைக்கும் பதிவுக் கட்டண வருமானங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊழியர் பணிக்கொடை ஏற்பாட்டுக்காக ரூபா 1,249,062 தொகை மீளாய்வாண்டினுள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் கடந்த வருடங்களுக்கு உரிய ரூபா 871,242 ஆன தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அந்த நிதியேற்பாடுகள் நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது. | ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் நடைமுறையல்லா பொறுப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிர்மாண கணக்கின் மீதி ரூபா 352,921 தொகையான நடைமுறைச் சொத்துக்களில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக தனியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சேமிப்புக் கணக்கின் மீதி மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான தேறிய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 34,278,827 ஆன மீதியொன்று காணப்பட்டமையால், ஒழுங்குபடுத்தல் பேரவையின் குறுங்கால நட்டமடையும் | வருடாந்த வருமானம் குறைவடைந்தமைக்கான தீர்வொன்றாக பதிவு வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு | நாட்டினுள் செயற்படும் அனைத்து தனியார் சுகாதார நிறுவனங்களையும் பதிவு செய்து வருமானத்தை அதிகரிப்பதற்கும், நிறுவனத்தின் |

| | | |
|---|---|---|
| நிலையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, 2017ஆம் ஆண்டு முதல் ஒழுங்குபடுத்தல் பேரவை தொடர்ச்சியாக இலாபம் ஈட்டியமையால் 2016 திசெம்பர் 31ஆந் திகதியில் நிலவிய ரூபா 33,719,154 ஆன திரண்ட நிதியம் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் ரூபா 15,756,616 வரை 53 சதவீதத்தால் கிரமமாக வீழ்ச்சியடைந்திருந்தது. | நடைமுறைப்படுத்தப்பட்ட வாறு காணப்படுகின்றமை. | செலவினங்களை குறைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து, நட்டமடையும் நிலையிலிருந்து மீள்வதற்கும் தொடர்ச்சியான நட்டம் பெறுவதனை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதியங்களின் மாற்றல்கள் கணக்கு | ரூபா 232,400 | பட்டோலைகள் | நிதியங்களின் மாற்றல்கள் கணக்கில் இதுவரை இனங்காணப்படாத தொகை தொடர்பில் அலுவலக முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடித் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த மீதிகளுக்கான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக உள்ள மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேரவையினால் அறவிடப்படும் பதிவுக் கட்டண வருமானத்தில் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டிய 50 சதவீத தொகையில் ரூபா 34,990,820 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் | 2007ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது | இது தொடர்பில் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | என்பது, எனினும், 2012ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாகாண சபையினால் முன்வைக்கப்படும் தனியார் சுகாதார அபிவிருத்திப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படும் முன்மொழிவு மற்றும் அதன் செயன்முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு பணம் அனுப்பப்படுவதாக, இது தொடர்பில் 2021 பெப்ரவரி மாதாந்தக் கூட்டத்தில் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ 12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது, பேரவையினால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 44,770,520 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்பு தெளிவற்றது. | நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 135, 136 மற்றும் 262(2) | நிதிப் பிரமாணம் 135 இன் பிரகாரம், நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களை கையளித்தல் இடம்பெற்றிருக்காததுடன், மீளாய்வாண்டினுள் | நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் நிதி அதிகாரங்களை | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்படாத 234 உறுதிச்சீட்டுகளுக்காக ரூபா 15,925,517 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட திகதி ''செலுத்தப்பட்டது'' எனும் முத்திரை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | கையளித்தல் தொடர்பில் பரிசோதித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வினை இந்த வருடத்தின் இறுதியில் நடாத்துவதற்கு எதிர்பார்ப்பதாக. | -மேற்படி- |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.8 மற்றும் 3.14 ஆம் பிரிவு | விழா முற்பணங்கள் மற:றும் வங்கியின் மூலம் வழங்கப்படும் கடன் தவிர ஏனைய அனைத்து கடன் தொகைக்காகவும் 4.2 சதவீத வட்டி மாதந்தோறும் அறவிடப்பட வேண்டிய போதிலும், பேரவையினால் 2018ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,446,666 ஆன கடன் தொகைக்கான வட்டி அறவிடப்பட்ருக்கவில்லை. மேலும், கடன் வழங்குவதற்கு முன்னர் பொது 272 படிவத்தினை பயன்படுத்தி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | 2021ஆம் ஆண்டு முதல் ஊழியர் கடனுக்காக 4.2 சதவீத வட்டி வீதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மற்றும் முறையான உடன்படிக்கையொன்று கையொப்பமிட்டுள்ளதாக. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ/03/2018 மற்றும் 2020 திசெம்பர் 18ஆந் திகதிய பீஈடீ/03/2020 ஆம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், 2020ஆம் ஆண்டுக்காக வெகுமதி கொடுப்பனவுகளை செலுத்தும் இயலுமை காணப்படாத போதிலும், | முகாமைத்துவக் குழுவின் மாதாந்த குழுக் கூட்டத்தின் அங்கீகாரத்துடன் ஊழியர் செயலாற்றலைக் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முரணாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2020ஆம் ஆண்டுக்காக ரூபா 148,500 ஆக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்திற்கொண்டு வெகுமதி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன. | செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2006 யூன் 06 ஆந் திகதிய 10/2006 மற்றும் 2007 நவம்பர் 01 ஆந் திகதிய 24/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 10/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை, 24/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்தாது உத்தியோகத்தர்களின் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 210,262 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | பேரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு வரையறுக்கப்பட்ட ஊழியர்களே உள்ளமையால் அவர்களை ஊக்குவிப்பதற்கு மற்றும் வருகையினை அதிகரிப்பதற்கு சேகரிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டது என்பது. | - மேற்படி - |
| (ஊ) | 2017 ஏப்ரல் 19ஆந் திகதிய 03/2017ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரலடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் அரச உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச்சொல்லல் தொடர்பான அறிக்கை வைத்திருக்க வேண்டியதுடன், 2020 யூலை 24ஆந் திகதி ரூபா 57,240 செலவிடப்பட்டு கைவிரலடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது 2021 ஏப்ரல் 27ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது நாட்டில் நிலவும் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் எமது நிறுவனத்தில் தற்காலிகமாக கைவிரலடையாள இயந்திரமொன்றை பயன்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுத்ததுடன், இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்கு வந்தவுடன் இந்த கைவிரலடையாள இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். அதற்கு புறம்பாக செயற்படும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2003 யூன் 02ஆந் திகதிய பீஈடீ 12ஆம் இலக்க பொது முயற்சிகள் | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படும் வருடாந்த பாதீட்டின் பிரதியொன்று நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படும் வருடாந்த பாதீட்டின் | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரதியொன்று நிதியாண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 5.2.5ஆம் பந்தி | 15 தினங்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அதன் பிரதியொன்று இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதியொன்று முகாமைத்துவக் குழுவினால் மாதாந்த கூட்ட அங்கீகாரத்துடன் 2020ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டுள்ளமை. | ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஏ) | 2014 பெப்ரவரி 17ஆந் திகதிய பீஎவ்டீ/ஆர்ஈடீ/1/4/2014/01 ஆம் இலக்க நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 04ஆம் பந்தி | நீண்ட காலத்திற்கான நோக்குடனான அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்க இலக்கிட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்க இலக்கிட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் திட்டமொன்று 2020ஆம் ஆண்டுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முகாமைத்துவக் குழுவினால் மாதாந்த குழுக்கூட்டத்தின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |
| (ஐ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2ஆம் பந்தி | நிறுவனத்தினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும், கண்காணிப்பு பேரவையால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முகாமைத்துவக் குழுவினால் மாதாந்த குழுக்கூட்டத்தின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 6,048,680 ஆன நட்டமாக ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 3,280,313 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,768,367 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருடாந்தம் ஒழுங்குபடுத்தல் பேரவையில் பதிவு செய்ய வேண்டிய தனியார் மருத்துவமனைகள், இரசாயன ஆய்வுகூடங்கள் போன்றவற்றின் பதிவுகள் குறைவடைந்தமை மற்றும் அவ்வாறு பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளாமை போன்ற விடயங்கள் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

-----------------------------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளுக்கமைய மீளாய்வாண்டுக்காக ஒழுங்குபடுத்தல் பேரவையால் சேகரிக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் ரூபா 27,647,089 ஆக காணப்பட்டதுடன், கடடந்த வருடத்தின் மொத்த வருமானம் ரூபா 30,122,360 ஆகும். அதன் பிரகாரம், கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 2,475,271 அல்லது 8.22 சதவீதமான வருமானத்தின் குறைவொன்று காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டின் போது ஒழுங்குபடுத்தல் பேரவையால் செலவிடப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூபா 33,695,769 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தின் செலவினம் ரூபா 33,402,673 ஆகும். அதன் பிராகரம், கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 293,096 இனால் செலவினம் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

### 3.1 செயலாற்றல்

---------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக தகவல் சமர்ப்பித்த 07 மாகாணங்களில் மாத்திரம் 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 2,443 தனியார் மருத்துவ நிறுவனங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன், தென் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் ஆகிய இரு மாகாணங்களினதும் தாபிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக பதிவு செய்த தனியார் மருத்துவ | பதிவினைப் பெற்றிராது நடாத்திச் செல்லப்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்காணவும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் குறித் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களின் எண்ணிக்கை 1,176 மாத்திரம் ஆகும். | | |
| (ஆ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிறுவனத்தினால் பேணப்பட வேண்டிய நியமத்தினை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் கண்காணிப்பு செய்வதற்க, தற்போது பேணப்படும் தர மதிப்பீட்டு நடைமுறையொன்றினை அமுல்படுத்துவதற்கு, ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆகக் குறைந்த தகைமைகள் பின்பற்றப்படுவதாக சான்றுபடுத்துவதற்கு மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது ஆகக் குறைந்த தரம் பேணப்படுவதாக பொறுப்புடன் செயற்படுவதற்கு மற்றும் வழங்கப்படும் நோயாளிகளை பராமரிக்கும் சேவைகளிள் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு சரியான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது. | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது மற்றும் பதிவினை வருடாந்தம் நாளதுவரையாக்கும் போது அந்த நிறுவனங்களை அந்தந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லதுதகுதி வாய்ந்த பதவியணியால் கண்காணிப்பு செய்வதாக மற்றும் அதன் பின்னர் அந்த பதிவிற்காக சுகாதார தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு அனுப்பப்பட்டது என்பது. | அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பணிகள் நிறைவு செய்ய தவறியுள்ளமையால், அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய வழிகாட்டிகளை விதிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின், 13(1) ஆம் பிரிவின் பிரகாரம், பேரவையின் ஆலோசனையின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் அமைச்சரினால் தனியார் மருத்துவ நிறுவனங்களுக்காக அங்கீகாரம் அளிக்கும் உத்தேச முறைமையொன்றினை கிரமமாக குறிப்பிட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரமளித்தலின் கீழ் தனியார் மருத்துவமனைகளை தரநிலைப்படுத்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் பேரவையினை தாபித்தமைக்கான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக உரிய நடைமுறையொன்றினை தயாரித்தல், தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காக உஉரிய வழிகாட்டிகளை தயாரித்தல் மற்றும் அவற்றை | தனியார் மருத்துவ நிறுவனங்களின் அங்கீகரிப்பதற்காக உத்தேச நடைமுறையொன்று முறையாக அறிவித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரமாணங்களாக மாற்றுதல் ஆகியவற்றுக்காக சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவின் ஊடாக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | |
| (ஈ) | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 18(2) உப பரிவின் (எ) பந்தியின் பிரகாரம், தொடர்பினை கொண்டுள்ள அல்லது, அதிருப்தியடைந்துள்ள நபர் ஒருவரால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு எதிராக சாட்டப்படும் ஏதேனும் முறைப்பாடு ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய செயல்வழிகள் அல்லது பிரிவுகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராகவுள்ள மக்களின் பிரச்சினைகளை முன்வைக்க முடியும் என்பதுடன், அது தொடர்பில் செயற்படுவதற்கு பொருத்தமான வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பது. | முறைப்பாடொன்றினை பெற்றுக்கொள்ளும் போது மற்றும் அந்த முறைப்பாட்டினை இறுதியாக அகற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய செயல்வழிகள் அல்லது பிரிவுகள் தொடர்பில் கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தல் பேரவையினால் சேகரிக்கப்படும் பதிவுக் கட்டணத்தில் ஐம்பது சதவீதத்தை மாகாண சபைகளின் செயலாளர்களுக்கு வழங்குவதற்கு முன்னர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தனியார் துறை அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்றுடன் வருடாந்த முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கும் ஆண்டின் இறுதியில் செலவினம் மற்றும் | இது தொடர்பில் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துரையாடியதன் பின்னர் சட்ட ஆலோகசனைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக மற்றும் 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததன் பிரகாரம் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதல் எனும் ஏற்பாடுகளை உள்ளடக்கி மேற்படி அதிகாரச்சட்டத்தின் 3(5) பிரிவினை திருத்திமைப்பதற்கு 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்படாமல் இருந்ததுடன், வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் அந்தந்த மாகாண சுகாதார பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் 3(5) பிரிவினை திருத்திமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக. | |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிவு செய்ய வேண்டிய திட்டவட்டமான காலப்பகுதியொன்று அதிகாரச்சட்டத்தில் அல்லது அறிவுரைகளின் ஊடாக குறிப்பிடப்பட்டிராத காரணத்தால் மருத்துவ நிறுவனங்களின் பதிவுக்காக எந்த திகதியிலும் குறித்த பணம் கிடைத்த பின்னர் உரிய வருடத்திற்காக பதிவுச் சான்றிதழ் வழங்குதல் இடம்பெறுகின்றது. அத்துடன், தண்டப்பணம் அறவிடப்பட்டிராமையால் ஆண்டினுள் பேரவைக்கு கிடைத்த வருமானம் தாமதித்துக் கிடைத்திருந்தது. | பதிவின் போது எதிர்கொள்ளும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளமை மற்றும் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் தாமதித்து பதிவு செய்யும் நிறுவனங்களுக்கு தண்டப்பணம் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டிய திட்டவட்டமான காலப்பகுதியொன்று தீர்மானிக்கப்பட்டு, அந்த காலத்தினுள் பதிவு செய்யாத நிறுவனங்களிடமிருந்த தண்டப்பணம் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 21ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு | பேரவையின் அங்கீகாரத்துடன், மாகாண சுகாதார | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும்) அதிகாரச் சட்டத்தின் 3(5) பிரிவின் பிரகாரம், சேகரிக்கப்படும் வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 சதவீதம் அந்தந்த மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், ஒழுங்குபடுத்தல் போரவயால் பதிவுக் கட்டண வருமானத்தின் 50 சதவீதம் மமாகாண சபை நிதியத்திற்க செலவு வைக்கும் பொருட்டு மாகாண பிரதம செயலாளர்களுக்கு அனுப்பப்படாது, அதற்குப் பதிலாக மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 2,679,250 தொகை உரிய மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைகள் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டதாக மற்றும் தொடர்ந்தும் இது தொடர்பில் சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதன் பின்னர் சட்டரீதியான அறிவுரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஆ) | மாகாண சபைகளில் செலவினங்களை மேற்கொள்வதற்கு எந்தவொரு ஏற்பாடும் அதிகாரச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றும் ஊழியர்களின் தொலைபேசி படிகள், போக்குவரத்துச் செலவினம் மற்றும் சம்பளங்களாக கடடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் ரூபா 1,589,629 ஒழுங்குபடுத்தல் பேரவையால் செலுத்தப்பட்டிருந்தது. | மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள மருத்துவர்கள் மற்றும் பதவியணிக்குரிய சம்பளம் மற்றும் படிகள் மாகாண சபைக்கு செலுத்த வேண்டிய 50 சதவீத பணத்திலிருந்து செலுத்தபடுகின்றமை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி அதிகாரச்சட்டத்தின் 3(5) பிரிவின் பிரகாரம், மேல் மாகாண சபைக்கு செலுத்தவேண்டிய பதிவுக்கட்ட வருமானத்தில் அந்த தெபகை கழிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | தனியார் மருத்துவ நிறுவனங்களில் உள்ள ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு மேற்படி அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்திருக்காத போதிலும், தனியார் மருத்துவமனைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியருக்காக Referesher Gap Filling Course எனும் பெயரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2014 மே 30ஆந் திகதி தனியார் ஆரோக்கியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்கள் சங்கம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து 5 வருட காலப்பகுதிக்காக புரிந்துணர்வ உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்தது. அந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக கடடந்த வருடத்தில் ரூபா 2,424,698 தொகையும், மீளாய்வாண்டினுள் ரூபா 540,484 தொகையும் ஒழுங்குபடுத்தல் பேரவையால் செலவு செய்யப்பட்டிருந்தது. | தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்களால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது பேரவையால் இனங்காணப்பட்டுள்ளது என்பது, அதன் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்களில் உள்ள தாதியர் ஊழியர்களுக்கு பயிற்சியளித்து உயரிய சேவையினை வழங்குவதற்காக பேரவையின் முன் அங்கீகாரத்துடன், தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து பரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டமை மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக எதிர்வரும் மாதாந்த பேரவைக் கூட்டங்களில் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளது. | அதிகாரச்சட்டத்தின் மூலம் அதிகாரம் கிடைத்துள்ள பணிகளுக்காக மாத்திரம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஒழுங்குபடுத்தல் பேரவையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவினைக் காட்சிபடுத்தி பெயர்ப்பலகைகளை பொருத்துதல் ஒழுங்குபடுத்தல் பேரவையின் பணியொன்றான போதிலும், 2011ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான 10 வருட காலப்பகுதியில் தனியார் மருத்துவ நிறுவனங்களில் புதிய பெயர்ப்பலகைகளை பொருத்துவதற்கு மற்றும் பழைய பெயர்ப்பலகைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு (Refill) ஒழுங்குபடுத்தல் பேரவையால் ரூபா 16,220,719 செலவிடப்பட்டிருந்தது. | புதிதாக பதிவு செய்யும் மருத்துவ நிறுவனங்களுக்கு புதிய பெயர்ப்பலகைகளை ஒழுங்கமைத்தல் 2007ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் மேற்கொள்ளப்படுகின்றமை, மற்றும் அதனை காட்சிப்படுத்துவதன் மூலம் பதிவு செய்த மருத்துவ நிறுவனங்களை மக்களுக்கு இனங்காண இடமளிக்கப்படுதல், மேலும், அதன் ஊடாக மக்களின் நம்பகத்தனைமையை பாதுகாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரச்சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்காக மாத்திரம் செலவினம் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | 2016 ஏப்ரல் 25ஆந் திகதிய 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை உரித்தாகும் என் அந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பட்டியலில் ஒழுங்குபடுத்தல் பேரவை உள்ளடக்கப்பட்டிராமையால், அந்த சுற்றறிக்கையின் ஊடாக பரிந்துரை செய்யப்பட்டிருந்த சம்பள திருத்தங்கள் ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு பொருந்தாத போதிலும், அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சம்பள அதிகரிப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. | ஊழியர் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்த விசேடக் குழுவின் பரிந்துரைக்கமைய ஊழியர் சம்பளம் 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு செலுத்துவதற்கு கேரவை தீர்மானித்திருந்தது. | இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒழுங்குபடுத்தல் சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் சபைக்குரிய பணிப்பொறுப்பு மற்றும் அதன் அளவு தொடர்பில் அறிந்து அதற்கு பொருத்தமான முறையில் பதவியணியை அங்கீகரிக்கவும் இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | ஆரம்பம் முதல் இரு உத்தியோகத்தர்களை மாத்திரம் கொண்ட நிறுவனத்தினை முறையாக நடாத்திச் செலவிதற்கு அவ்வப்போது பொருத்தமான நடைமுறைக்கமைய ஊளியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டமை மற்றும் நிறுவனத்தின் பணிப்பொறுப்பினை உரிய முறையில் அறிந்து அதற்குப் பொருத்தமான முறையில் ஆட்சேர்ப்பதற்காக பதிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், பேரவையால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது. | பதவியணியை அங்கீகரிக்கவும், அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களில் வெளிவாரித் தரப்பினருக்கு ரூபா 370,300 செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் பணிப்பொறுப்பினை உரிய முறையில் அறிந்து அதற்குப் பொருத்தமான முறையில் ஆட்சேர்ப்பதற்காக பதிய நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், பேரவையால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 133 மற்றும் 2019 சனவரி 12ஆந் திகதிய டீஎம்ஏ/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் பேரவைக்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவுக்காக அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர் என்பது மற்றும் எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12ஆந் திகதிய டீஎம்ஏ/1-2019 ஆம் இலக்கமுடைய முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டுக்கு 01 டிடிபயாக வருடமொன்றுக்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஒழுங்குபடுத்தல் பேரவையால் மீளாய்வாண்டின் போது எந்தவொரு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவுக்காக அங்கத்தவர்களை நியமித்துள்ளமை மற்றும் எதிர்காலத்தில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 14ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜி/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான ''2030 நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பேரவை அறிந்திருக்காத காரணத்தால் தமது வியப்பரப்பிற்கு உட்பட்ட பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையில் கீழான குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அடைவுகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான ''2030 நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பேரவை அறிந்திருக்காமை மற்றும் எதிர்காலத்தில் பொருத்தமான குறிகாட்டியொன்றை இனங்காண நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | குறித்த சுற்றறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான ''2030 நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக ஒழுங்குபடுத்தல் பேரவை அறிந்து தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையில் கீழான குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அடைவுகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |